விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 312 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 10 வியாழக்கிழமை (27.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

30 வீதத்தினால்

## மின்கட்டணம் உயரவுள்ளது

நாட்டு மக்களுக்கு மேலுமொரு சுமை

*(கொழும்பு)*

*சர்வதேச நாணய நிதியத்தின் பிரேரணைக்கு அமைவாக மின் கட்டணத்தை மீளவும் 30 வீதத்தினால் உயர்த்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தொழிற்சங்க கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.*

கடந்த 15ம் திகதி முதல், மின் கட்டணத்துக்காக, சமூக பாதுகாப்பு வரியாக, 2.56 ரூபாய் வசூலிக் ▷11

## ‘சாம்பலில் இருந்து எழுவோம்’

### மகிந்த தலைமையில் பெரமுனவின் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மூன்றாவது கட்சிக் கூட்டம் ‘சாம்பலில் இருந்து எழுவோம்’ என்ற தொனிப் பொருளின் கீழ் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவின் ஏற் ▷11

ஜி.எஸ்.பி சலுகையை

### பாதுகாப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை பாதுகாப்பதற்காக மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான ▷12

இந்திய கடன் திட்டத்தின் கீழ்

### மருந்துத் தட்டுப்பாட்டை உடன் தீர்க்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாடுகளுக்கு துரித தீர்வினை வழங்குவதற்காக இந்திய கடன் திட்டத்தின் கீழ் உரியநடவடிக்கை ▷12

காணி விடுவிப்புத் தொடர்பில்

## ரணிலுடன் பேசி நல்ல முடிவு பெற்றுத் தருகின்றேன்

### யாழ்.வந்த அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

*(யாழ்ப்பாணம்)*

வலி.வடக்கில் பொதுமக்களின் காணி விடுவிக்கப்படாமை தொடர்பில் ஜனாதிபதி ரணிலுடன் பேசி நல்லதொரு முடிவினைப் பெற்றுத் தருவதாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட தூதுவர் தெரிவித்துள்ளார். *(11ஆம் பக்கம் பார்க்க)*



### தேர்தல் முறையை மாற்றக் கோரிக்கை

(கொழும்பு)

தேர்தல்முறைமையில் திருத்தம் செய்வதற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிக்குமாறு சபாநாயகரிடம்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, இந்த கோரிக்கையை விடுத்துள்ளார். (ம-7)

இலங்கையில்

### 9 மாதங்களில் 435 கொலைகள்

(கொழும்பு)

இலங்கையில் இந்த வருடத்தில் இதுவரை 435 கொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று தெரிவித்தார்.

"செப்டெம்பர் 30ஆம் திகதியுடன் ▷12

## கூட்டமைப்பு எம்.பிக்கள் எவருக்கும் இரட்டைப் பிரஜாவுரிமை இல்லை

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களில் எவருமே இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் அல்லவென அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இரட்டைப் பிரஜாவுரிமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து ▷11

### திருடப்போன வீட்டில் உல்லாசமாக இருந்தவர் கைது

மூளாய் வேரம் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மூளாய் - வேரம் பகுதியில் உள்ள வீடொன்றில் திருடச் சென்றிருந்த திருடன் அந்த வீட்டிலேயே இருந்து சாராயம் குடித்து, சமைத்துச் சாப்பிட்டுவிட்டு படுத்து உறங்கிய நிலையில் வீட்டு உரிமையாளர் மற்றும் பொதுமக் ▷11

இரட்டைக் குடியுரிமை பெற்றவர்களை

### பாராளுமன்றத்தில் வெளிப்படுத்த முடியாது

அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் குறித்து பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தும் வழிமுறை அரசாங்கத்திடம் இல்லை ▷11

## சமகால நிலைமை தொடர்பில் தமிழ் அரசியல் பிரதிநிதிகளுடன்

யாழுக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்கத் தூதுவர் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

நாட்டின் சமகால நிலைமை தொடர்பில் தமிழ் அரசியல் பிரதிநிதிகளுடன் யாழுக்கு விஜயம் ▷11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோதுமை மாவின் தரத்தை ஆராய அதிகாரம் இல்லை

## தர நிர்ணய நிறுவனப் பணிப்பாளர்

(கொழும்பு)

கோதுமை மாவை இறக்குமதி செய்யும் போது, அல்லது திறந்த சந்தையில் விற்பனை செய்யும் போது, அதன் தரத்தை ஆராய்வதற்கு, தமக்கு சட்டபூர்வ அதிகாரம் இல்லை என, இலங்கை தர நிர்ணய நிறுவன பணிப்பாளர் நாயகம் சித்திக ஜி சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தரமற்ற கோதுமை மா விற்பனை தொடர்பில், நிறுவனத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் போது, இவ்வாறு குறிப்பிட்டார்.

அவ்வாறான அதிகாரங்கள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரிடம் வழங்கப்பட்டுள்ளது.

கட்டுப்பாட்டாளரின் அத்தகைய அதிகாரங்கள், இலங்கை தர நிர்ணய நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டால், சந்தையில் உள்ள பொருட்களின் தரத்தை ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்க முடியும்.

என இலங்கை தர நிர்ணய நிறுவன் பணிப்பாளர் நாயகம் சித்திக ஜி சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# சட்டபூர்வமான பண அனுப்பல்களை ஊக்குவிக்க விசேட திட்டம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களுக்கு சட்டபூர்வமான முறையில் பண அனுப்பல்களை ஊக்குவிக்கும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சலுகைகளுக்கு கடந்த ஆகஸ்ட் 8 திகதி அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் குறித்த சுற்றறிக்கை ஆலோசனைகள் வெளியிடப்பட்டுள்ளதுடன், தகைமை பெறுகின்ற புலம்பெயர் தொழிலாளர்களுக்கு உயர்ந்தபட்சம் 25,000 அமெரிக்க டொலர்களுக்கு உட்பட்டு இரண்டு சக்கர இலத்திரனியல் வாகனமொன்றும், உயர்ந்தபட்சம் 65,000 அமெரிக்க டொலர்கள் உட்பட்டு நான்கு சக்கர முழு அளவிலான இலத்திரனியல் வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரால் அமைச்சரவையின் கவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள, புலம்பெயர் தொழிலாளர்களால் வெளிநாட்டில் வருமானமாக ஈட்டும் வெளிநாட்டு செலாவணியை இலங்கைக்கு அனுப்புவதை மேலும் ஊக்குவிப்பதற்காக கீழ்க்காணும் நடவடிக்கைகளுக்காக அமைச்சரவை உடன்பாடு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

2023.04.30 ஆம் திகதி வரை வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்காக விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திகதி வரைக்கும் அனுப்பப்படுகின்ற அந்நிய செலாவணியின் பெறுமதி 50 சதவீதம் வரை செலவு, காப்பீட்டு பெறுமதியுடன் கூடிய இரண்டு சக்கர இலத்திரனியல் வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்காக அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2023.12.31 ஆம் திகதி வரை எமது நாட்டுக்கு அனுப்பப்பட்ட அந்நிய செலாவணிப் பெறுமதி 50 சதவீதம் வீதம் வரைக்கும் செலவு, காப்பீட்டு பெறுமதியுடன் கூடிய நான்கு சக்கர முழு அளவிலான இலத்திரனியல் வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்காக அனுமதி வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலையின் ஆசிரியரும் கிளிநொச்சி விசேட (காணி) மத்தியஸ்த சபையின் தவிசாளருமான திரு.**சத்தியநாதன் தவசீலன்** அவர்கள் கடந்த 2022.10.04ம் திகதி அன்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றின் நீதிபதி கௌரவ **செ.லெனின்குமார்** அவர்கள் முன்னிலையில் தீவு முழுவதற்குமான சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவரைப் பாராட்டுவதோடு வாழ்வில் மேலும் பல உயர்வுகள் பெற்று சிறப்புற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்: **ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
**மு/விசுவமடு மகா வித்தியாலயம்**

(13266)


# இலங்கை - நெதர்லாந்து விமான சேவை ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கை மற்றும் நெதர்லாந்துக்கு இடையிலான இருதரப்பு விமான சேவைகள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கை மற்றும் நெதர்லாந்துக்கிடையில் இராஜதந்திரத் தொடர்புகள் 1951 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், விமான சேவைகள் ஒப்பந்தத்தை மேற்கொள்வதன் மூலம் இரு நாடுகளுக்கிடையில் நேரடியான பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்குகள் விமானப் போக்குவரத்தை ஆரம்பிப்பதற்கு வசதிகள் உருவாகும்.

அதன் மூலம், இரு நாடுகளுக்கிடையில் சுற்றுலா, கல்வி, வணிகம், முதலீடுகள், விவசாயம் மற்றும் கலாச்சாரத் தொடர்புகள் மேலும் விருத்தியடையும்.

அதற்கமைய, இரு நாடுகளுக்கிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் உடன்பாடு எட்டப்பட்டுள்ள விடயங்களுக்கமைய இருதரப்பு விமான சேவைகள் ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)


31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
30
.
09
.
1964



உதிர்வு
26
.
09
.
2022

அமரர் பழனி சிறிதரன்

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகி போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந் நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய**
**இறைவனைப் பிரார்த்திப்போம்.**

ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...

(C-5153) குடும்பத்தினர்



31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
20
-
08
-
1963



மறைவு
29
-
09
-
2022

கடந்த 29.09.2022 வியாழக்கிழமை
இறைபதம் எய்திய எமது குடும்பத்தின் குலவிளக்கு

அமரர் திருமதி

சிவசக்தி ஸ்ரீகாந்தராசா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 27.10.2022 இன்று வியாழக்கிழமை முற்பகல் 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும்.

வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 29.10.2022 சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் காலை 11 மணியளவில் நடைபெறும். இந்நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(C-5154)

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி யாழ்.தெல்லிப்பழையில் பேரணி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்றைய தினம் புதன்கிழமை விழிப்புணர்வுப் பேரணியொன்று இடம்பெற்றது.

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வலி.வடக்கு பிரதேச சபை தெல்லிப்பழை உப அலுவலகம் மற்றும் தெல்லிப்பழை பொது நூலகத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய முன்றலில் காலை 9 மணியளவில் ஆரம்பித்த பேரணி தெல்லிப்பழைச் சந்தியில் நிறைவடைந்தது.

போதைப்பொருள் பாவனையை ஒழித்தல், வாசிப்பு பழக்கத்தை ஊக்குவித்தல், பிளாஸ்டிக் பாவனையைக் குறைத்தல், பாலின சமத்துவத்தை பேணல், இயற்கை விவசாயத்தை ஊக்குவித்தல் போன்ற பல்வேறு கோரிக்கைகள் இந்தப் பேரணியில் வலியுறுத்தப்பட்டன.

பிரதேச சபை ,பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள்,சமூக ஆர்வலர்கள மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர். (4)





யாழ்ப்பாணம்-நல்லூர் கந்தசுவாமி கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆகியவற்றில் கந்தசஷ்டி 1 ஆம் நாள் உற்சவம் நேற்று காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.
(படம்:-சிவசாந்தன், கஜிந்தன்)

## சிறுமியின் சங்கிலி அறுப்பு தொடர்பில்

# சிவில் பாதுகாப்பு திணைக்கள கட்டளை அதிகாரியின் விளக்கம்

(கிளிநொச்சி)

வலம்புரிப் பத்திரிகையில் கடந்த 23 ஆம் திகதி முன் பக்கத்தில் பிரசுரமான 'வலி வடக்கு பலாலி வள்ளுவர் புரத்தில் சிறுமியின் சங்கிலி அபகரித்தவர் மக்களால் மடக்கிப் பிடிப்பு விசாரணையில் இராணுவ சிப்பாய் என அடையாளம் காணப்பட்டார் எனும் தலைப்பிடப்பட்ட செய்தியில் இராணுவச் சிப்பாய் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தைச் சேர்ந்தவர் என குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் குறித்த சிப்பாய் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தைச் சேர்ந்தவர் இல்லை என கிளிநொச்சி இரணைமடு சிவில் பாதுகாப்புத் திணைக்கள கட்டளை அதிகாரி உறுதிப்படுத்தியுள்ளார். (4)

# கோண்டாவில் இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழா-2022

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இந்துக் கல் லூரியின் பரிசளிப்பு விழா-2022 இன்று காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் ந.தயாளன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (4)

## இந்தியாவிலிருந்து திரும்பி வந்த

# இலங்கையர்களின் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதற்கான நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து திரும்பி வந்த இலங்கையர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த நடமாடும் சேவையில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, பதிவாளர் நாயகம் திணைக்களம், ஆட்பதிவு திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், இழப்பீட்டுக்கான அலுவலகம், காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம், மாகாண காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் ஆகிய திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்கள் பங்குபற்ற உள்ளன.

பிறப்பு மற்றும் திருமண சான்றிதழ் பெற்றுக் கொள்ளல், பிரஜாவுரிமை சான்றிதழ் பெற்றுக் கொள்ளல், இந்தியாவிலிருந்து திரும்பி வந்த இலங்கையர்களுக்கான காணித்தேவை மற்றும் காணி உரிமைப் பிரச்சினைகள், வன் முறையால் பாதிக்கப்பட்ட சொத்து மற்றும் உயிரிழப்பு காயத்திற்கான நட்டஈடு பெற்றுக்கொள்ளல், தேசிய அடையாளஅட்டை பெற்றுக் கொள்ளல், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினூடாக ஏற்கனவே அனுப்பப்பட்ட கோவைகளை பூரணப்படுத்தல் ஆகிய சேவைகள் குறித்த நடமாடும் சேவையில் முன்னெடுக்கப்படவுள்ளன.

தேவையான விண்ணப்பங்களை தங்கள் பிரதேச செயலகம் ஊடாக பெற்றுக் கொள்ளலாம் என யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் அறிவித்துள்ளார். (4)



எனது 31 ஆண்டுகள் ஆன்மீகப் போராட்டப் பாதையிலே...

நாளை (28.10.2022) சுழிபுரம் பறாளாய் ஈசுர விநாயகர் தேவஸ்தானத்தில்...

**கண்ணைக் கொத்திய காக்காப் பிள்ளையாரே!**
**இன்னும் தாமதம் ஏன்?**
**நீர் பார்த்துக் கொண்டிருந்தால் நாம் என்னாவது!!!**

**ஆன்மீகப் போராட்டம் 31 ஆம் வருட பூர்த்தி**
**விசேஷ பூஜை வழிபாடுகள்**

காலம்:- 28.10.2022 வெள்ளி விநாயகர் சதுர்த்தியன்று.
நேரம்:- பி.ப 3.00 மணியளவில் ஆரம்பமாகி விசேஷ அபிஷேக பூஜை வழிபாடுகளுடன் நிறைவு பெறும்.

**ஈசுர விநாயகரே! உம் திருப்பாதம் போற்றி! போற்றி!! போற்றி!!!**

**என் அன்புள்ளங்களே!**

**அரசியல்வாதிகளின் நாட்டைக் கட்டி எழுப்புவோம்!**
**என்னும் கூற்றைச் சிந்திப்போம்...**

நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்னும் அரசியல்வாதிகளின் கூற்று வாயால் கூறினால் மட்டும் போதாது. அதற்குரிய வழி முறைகள் கண்டறியப்பட்டு விரைவாக திட்டமிடப்பட வேண்டும். நாட்டில் முதலாவதாக அரசியல் ஸ்திரத்தன்மை நம்பகமாக இருத்தல், பொருளாதார மேம்பாடு, மத நல்லிணக்கம், இன நல்லிணக்கம், சகோதரத்துவம் போன்றவை கட்டி எழுப்பப்படல் வேண்டும். அத்துடன் இந்தியாவின் அனுசரணை மிக மிக முக்கியமானதாகும். தற்போதைய நிலையில் இந்தியா தனது நாட்டின் பாதுகாப்பிற்கும் இறையாண்மைக்கும் இலங்கையால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று சிந்திக்கத் தொடங்கிவிட்டது.

இந்நிலையில் ஈசுர விநாயகரின் சூத்திரத்திலே ஐயா அன்று எழுதிய இந்தியாவின் நிலைப்பாட்டை இந்நேரத்தில் கூறாமல் இருக்கமுடியாது. இலங்கை, இந்தியா உறவுகளில் கடும் பாதிப்பு ஏற்படும். வெளியுறவு கொள்கைகளில் காரசாரமான வாக்குவாதங்கள் ஏற்படும். இந்தியா-இலங்கை மீது சீறி சினக்கும். இலங்கையுடனான தற்போதுள்ள வெளியுறவுக்கொள்கையை மாற்றி அமைத்தே தீரும். யாவற்றையும் நடைமுறையில் காண்போம்.

இவ்வாறான நிலையில் இலங்கை பல சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடும். வருமுன் காப்பவனாக இலங்கை அரசு தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும். முதலில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட வேண்டும். அதற்கு முக்கியமான தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு உடன் காண வேண்டும். இலங்கை-இந்தியா ஒப்பந்தத்தின் விளைவாக 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட வட கிழக்கு மாகாண சபைக்கு சகல அதிகாரங்களும் பகிர்ந்தளிக்க வேண்டியது அவசியமாகும். இதையே இந்திய அரசு இப்போதும் அடிக்கடி கூறி வருகின்றது. இதை வைத்தே இந்தியா உள் நுழைய வாய்ப்புக்கள் நிறையவே உண்டு. அவ்விதம் உள்நுழைத்து விட்டால் திரும்பி போகமாட்டாது. இலங்கை அரசு இப் பிரச்சினையை தீர்க்க தாமதித்தால் பின்னர் போராட்டம் வேறு வடிவமெடுக்கும். நாட்டு மக்கள் துன்பமடைய நேரிடும்.

மக்கள் நாட்டை மீட்க நாட்டிற்காக போராட வேண்டிய நிலை ஏற்படும். யாவும் சர்வ வல்லமை பொருந்திய ஈசுர விநாயகரின் திருக்கரங்களிலே நாடும் மக்களும்.

மிகுதி பின்னர்...

(13259)

சோழியூரான் பிறைசூடி குரு
(ஆன்மீகவாதியும் சந்ததிப்பூசகரும் பரிபாலகரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2022 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மாத நிகழ்வினை முன்னிட்டு வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தினால் நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழக மைதானத்தில் கடந்த 21 ஆம் திகதி நடத்தப்பட்ட ஆண்,பெண் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கான கயிறிழுத்தல் போட்டியில் வேலணை பிரதேச சபையின் ஆண், பெண் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டதுடன் ஆண்களுக்கான கயிறிழுத்தல் இறுதிப் போட்டியில் வேலணை பிரதேச சபை வெற்றி வாகை சூடியது.



மேஜர் ஜெனரல் ரவி இரட்ணசிங்கம் சவால் கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட போட்டியின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றது. இதில் யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜயசுந்தர, 55 ஆவது படைப் பிரிவு தளபதி மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரத்ன, 51 ஆவது படைப்பிரிவு தளபதி மேஜர் ஜெனரல் மகேந்திர பிரணாந்து, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை.சிறி ஆகியோர் கலந்து கொண்டனர்.இறுதிப் போட்டியில் சிவாநந்தா விளையாட்டுக்கழகமும் கலைமதி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டதில் கலைமதி விளையாட்டுக் கழக்ம் வெற்றி பெற்றுக் கொண்டது. (படம்-மகாலிங்கம்)

# 7 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தியது ஆஸி.

இருபது- 20 உலகக் கிண்ணத்தில் அவுஸ்திரேலியா, இலங்கை அணிகள் நேற்று முன்தினம் மோதின. டாஸ் வென்ற அவுஸ்திரேலியா பந்து வீச்சை தேர்வு செய்தது.



அதன்படி முதலில் பட்டிங் செய்த இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 157 ஓட்டங்களை எடுத்தது. நிசங்கா 40 ஓட்டங்களுடன் வெளியேறினார்.



சரித் அசலங்கா 38 ஓட்டங்களுடன் ஆட்ட மிழக்காமல் இருந்தார். இதையடுத்து, 158 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலிய அணி களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர் டேவிட் வார்னர் 11 ஓட்டங்களிலும் மிட்செல் மார்ஷ் 17 ஓட்டங்களிலும் மக்ஸ்வெல் 23 ஓட்டங்களிலும் அவுட்டாகினர்.

ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் கப்டன் ஆரோன் பின்ச் நிதானமாக ஆடினார். ஸ்டோய்னிஸ் ஆரம்பம் முதல் அதிரடியாக ஆடினார்.

அவர் 17 பந்தில் அரை சதமடித்தார். இறுதியில, அவுஸ்திரேலியா அணி 16.3 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 158 ஓட்டங்களை எடுத்து அபார வெற்றி பெற்றது. ஸ்டோய்னிஸ் 18 பந்தில் 6 சிக்சர், 4 பவுண்டரி உட்பட 59 ஓட்டங்களும் ஆரோன் பின்ச் 31 ஓட்டங்களும் எடுத்து ஆட்ட மிழக்காமல் களத்தில் இருந்தனர். (4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2717

எழில்




சுகன்யா




விகிர்தினி




தவம்




புஷ்பா




மேரி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைக் குடியுரிமையுடைய உறுப்பினர்கள் உடன் பதவி விலக வேண்டும்-தம்மானந்த தேரர்

(கொழும்பு)

இரட்டைக் குடியுரிமையை வைத்திருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக பதவி விலக வேண்டும்.

22 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைய அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட முடியாது என மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை வலியுறுத்தினார்..

நாட்டின் பொருளாதாரம், அரசியல் செயற்பாடுகளில் செல்வாக்கு செலுத்தக் கூடிய உயர் பதவிகளை இரட்டை பிரஜைகள் வகிக்க இடமளிக்கக் கூடாது.

இரட்டைக் குடியுரிமை வைத்திருப்பவர்கள் இலங்கைப் பிரஜைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தீர்மானங்களை எடுக்க அனுமதிப்பது பிரச்சினைக்குரியது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (நி)


## விற்பனைக்கு

08 மாதம் நிரம்பிய டோமன் இன நாய்கள் ஒரு சோடி கூட்டுடன் விற்பனைக்குண்டு.

**தொடர்புகளுக்கு,**

**076 678 9158 (பண்டத்தரிப்பு)** (C-1829)


# நாட்டை வந்தடைந்த மசகு எண்ணெய்க் கப்பல்

(கொழும்பு)

60,000 மெற்றிக் தொன் மசகு எண்ணெய் தாங்கிய கப்பலொன்று நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்ததாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இக்கப்பலிலிருந்து எண்ணெய் இறக்கும் நடவடிக்கை உடனே ஆரம்பமாகும் என்வும் அவ்வமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், மசகு எண்ணெய் தாங்கிய மேலும் 5 கப்பல்கள் விரைவில் இலங்கைக்கு வரவுள்ளதாகவும் மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)


## வடமாகாண சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் வ/து

பதவி வெற்றிடம் - தற்காலிக நியமனம்

வடமாகாண சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தின் கீழ் குறிப்பிடப்படும் தற்காலிக பதவிக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பதவி - எழுதுநர் 302/13
2. வெற்றிடம் - 01
3. சம்பளம் - 18360.00.( கூட்டுறவு சுற்றுநிருபங்களுக்கமைவான படிகளும் வழங்கப்படும் )
4. தகைமைகள் - அ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் எழுதுநர்/காசாளர்/கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் எழுதுநர்/ காசாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது04 ஆண்டு கால அனுபவம்

   அல்லது

   ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப்பரீட்சையில் சித்தி / க.பொ.த சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் சிங்களம்/ தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி
5. வயதெல்லை - 18-45 இற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்
6. விண்ணப்ப முடிவுத் திகதி - 10.11.2022
7. குறிப்பு - விண்ணப்பதாரி தனது முழுப்பெயர் . நிரந்தர முகவரி . தற்போதைய வசிப்பிட முகவரி . அடையாள அட்டை இல : பிறந்த திகதி. வயது. பால் ,கல்வித் தகைமை . சேவைத்தகைமை ஆகிய சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவத்தினை தாங்களே தயாரித்து " தலைவர் . வட மாகாண சி.க.கூ.சங்க சமாசங்களின் சம்மேளனம் . 2ம் மாடி . கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை . A9 வீதி . கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**ஞானசீலன். றொபின்தயாளசீலன்**
**தலைவர் , வடமாகாண சி.க.கூ.ச.ச.சம்மேளனம்** (C-5151)



## மரண அறிவித்தல்

பிறப்பு 08 • 02 • 1952



இறப்பு 24 • 10 • 2022

**அமரர். சின்னத்துரை சிவராசா (பாஞ்சன்துரை)**

வரணி இடைக்குறிச்சியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவராசா அவர்கள் 24/10/2022 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்துரை-வல்லி தம்பதியரின் அன்பு மகனும் இந்திராணி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசமணி, சிங்கராசா , பாக்கியம் மற்றும் சிவரத்தினம் ஆகியோரின் சகோதரனும் விஜயராணி, சிவரோசா, லீலாவதி , சிவரதி (ஜேர்மன்), சிவாஜினி, சிவறோசினி, சிவேந்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகேந்திரம், சிவாஜி, ரவீந்திரன் (லண்டன்), மென்டீஸ் (ஜேர்மன்), சிவகுமார், ஜெயசந்திரன் (இத்தாலி) ஆகியோரின் மாமனாரும் முகுந்தன், யோகிதா, சுகிந்தன், நிறோ, கிருஷா, சிநேகா, விந்துஷா, நிறோசன் (பிரான்ஸ்), சகானா, நிறஞ்சன் (அவுஸ்திரேலியா), நிருசன், நர்மதா, சுகானா, சுருத்திகன், செபான், துஷந்தன், ஜெபசப்திகா, பகீரதன், தீபகரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27.10.2022 காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வரணி தில்லியம்பலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-5152)

வரணி **077 899 7973** **077 665 3267** தகவல்: குடும்பத்தினர்.



# இராசிபலன்

27.10.2022
ஐப்பசி 10, வியாழக்கிழமை
துதியை பிற்பகல் 2.35 மணிவரை


விசாகம் பிற்பகல் 2.26 மணிவரை
சுபநேரம் 7.33-9.03 மணிவரை
இராகுகாலம் 1.33-3.03 மணிவரை

சந்திராஷ்டமம் - அச்சுவினி, பரணி


**வளவன்**




மேஷம்: மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும், இறைவழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.



கடகம்: எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அடிப்படை வசதி வாய்ப்பைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, பகை விரோதம் விலகும்.



துலாம்: சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.



மகரம்: பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், போசன சுகமுண்டு.



ரிஷபம்: சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.



சிம்மம்: தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வாகன சுகமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காண வேண்டிய நாள்.



விருச்சிகம்: குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வருமானம் திருப்தி தரும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, கற்பனை மிகுதியான நாள்.



கும்பம்: செய்தொழில் மேன்மையுண்டு, எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி தரும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.



மிதுனம்: வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும்.



கன்னி: சுயமுயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும்.



தனுசு: திட்டமிட்ட பயணமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழிலில் எதிர்பாராத இடமாற்றங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.



மீனம்: தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் கைகூடும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

மலர்கள் மலர யாருடைய உத்தரவுக்காகவும் காத்திருப்பதில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 12





"மெய்யாகவா?" என்று வந்தியத்தேவன் தன் வியப்பை வெளியிட்டான்.

"மெய்யாகத்தான்! அது உனக்குத் தெரியாதா, என்ன? யானை, குதிரை, பல்லக்கு, பரிவட்டம் எல்லாம் கடம்பூர் அரண்மனையைச் சேர்ந்தவைதான். பழுவேட்டரையரை எதிர்கொண்டு அழைத்துப் போகின்றன. பழுவேட்டரையர் எங்கே போனாலும் இந்த மரியாதையெல்லாம் அவருக்கு நடைபெற்றே ஆக வேண்டும்."

வந்தியத்தேவன் மௌன யோசனையில் ஆழ்ந்தான். பழுவேட்டரையர் தங்குமிடத்தில் தானும் தங்குவதென்பது எளிதில் கிடைக்கக்கூடிய வாய்ப்பு அல்ல. அந்த மாபெரும் வீரருடன் பழக்கம் செய்து கொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைத்தாலும் கிடைக்கலாம். ஆனால் அவருடைய முரட்டுப் பரிவாரங்களுடன் ஏற்பட்ட அனுபவம் இன்னும் அவனுக்குக் கசந்து கொண்டிருந்தது.

"தம்பி! எனக்கு ஒரு உதவி செய்வாயா?" என்று ஆழ்வார்க்கடியான் இரக்கமான குரலில் கேட்டான். "உனக்கு நான் செய்யக்கூடிய உதவி என்ன இருக்க முடியும்? இந்தப் பக்கத்துக்கே நான் புதியவன்" "உன்னால் முடியக்கூடிய காரியத்தையே சொல்வேன். இன்றிரவு என்னைக் கடம்பூர் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டுபோ!"

"எதற்காக? அங்கே யாராவது வீரசைவர் வருகிறாரா? சிவன் பெரிய தெய்வமா? திருமால் பெரிய தெய்வமா? என்று விவாதித்து முடிவு கட்டப் போகிறீர்களா?" "இல்லை, இல்லை சண்டை பிடிப்பதே என் வேலை என்று நினைக்க வேண்டாம். இன்றிரவு கடம்பூர் மாளிகையில் பெரிய விருந்து நடைபெறும். விருந்துக்கு பிறகு களியாட்டம், சாமியாட்டம், குரவைக்கூத்து எல்லாம் நடைபெறும். குரவைக் கூத்துப் பார்க்க வேண்டும் என்று எனக்கு ஆசை! "அப்படியிருந்தாலும் நான் உன்னை எப்படி அழைத்துப் போக முடியும்?"

"என்னை உன் பணியாள் என்று சொன்னால் போகிறது." வந்தியத்தேவனுக்கு முன்னால் ஏற்பட்ட சந்தேகம் வலுப்பட்டது.

"அந்த ம்ாதிரி ஏமாற்று மோசடிக்கெல்லாம் நீ வேறு யாரையாவது பார்க்க வேண்டும். உன்னைப் போன்ற பணியாளன் எனக்குத் தேவையில்லை. சொன்னால் நம்பவும் மாட்டார்கள். மேலும் நீ சொன்னதையெல்லாம் யோசித்துப் பார்த்தால் என்னையே இன்று கோட்டைக்குள் விடுவார்களோ என்ற சந்தேகம் உண்டாகிறது."

"அப்படியானால் நீ கடம்பூருக்கு அழைப்புப் பெற்று போகவில்லையென்று சொல்லு!" "ஒருவகையில் அழைப்பு இருக்கிறது. சம்புவரையர் மகன் கந்தமாறவேள் என்னுடைய உற்ற நண்பன். இந்தப் பக்கம் வந்தால் அவர்களுடைய அரண்மனைக்கு அவசியம் வரவேணுமென்று என்னைப் பலமுறை அழைத்திருக்கிறான்."

"இவ்வளவுதானா? அப்படியானால் உன் பாடே இன்றைக்குக் கொஞ்சம் திண்டாட்டமாத்தான் இருக்கும்." இருவரும் சிறிது நேரம் மௌனமாகப் போய் கொண்டிருந்தார்கள். "ஏன் என்னை இன்னும் தொடர்ந்து வருகிறாய்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"அந்தக் கேள்வியையே நானும் திருப்பிக் கேட்கலாம்; நீ ஏன் என்னைத் தொடர்கிறாய்? உன் வழியே போவது தானே?" வழிதெரியாத குற்றத்தினால் தான் தம்பி! நீ எங்கே போகிறாய்? ஒரு வேலை கடம்பூருக்குத்தானா?" "இல்லை; நீதான் என்னை அங்கு அழைத்துப் போக முடியாது என்று சொல்லிவிட்டாயே? நான் விண்ணகரக் கோயிலுக்குப் போகிறேன்."

"வீரநாராயணப்பெருமாள் சந்நிதிக்குத் தானே?" "ஆம்." "நானும் அந்த ஆல்யத்துக்கு வந்து பெருமாளைச் சேவிப்பதற்கு விரும்புகிறேன்." "ஒரு வேளை விஷ்ணு ஆலயத்துக்கு நீ வரமாட்டாயோ என்று பார்த்தேன். பார்க்க வேண்டிய கோயில்; தரிசிக்க வேண்டிய சந்நிதி. இங்கே ஈசுவர முனிகள் என்ற பட்டர், பெருமாளுக்கு கைங்கரியம் செய்து வருகிறார். அவர் பெரிய மகான்."

(தொடரும்...)

# ஒக்டோபர் வாசிப்பு மாதம்

## சித்த ஆயுள் வேத மருத்துவத்தின் சிறப்பு



"சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்" என்பது முதுமொழி. அதாவது எமது உடலில் எந்தவிதமான நோய்களும் இல்லாதிருந்தால் தான் நமது ஆயுள் நீடிக்கும். மனிதனாக பிறப்பது மட்டுமல்லாது நாம் நமது உடலை சுத்தமாகவும் நோய் நொடிகள் அற்றதாகவும் பேணிக் காப்பது நமது கடமை ஆகும்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது பழமொழி. எந்தவிதமான செல்வங்களை கொண்டிருந்தாலும் நோயற்ற வாழ்வை கொண்டிருப்பது அரிதாகும். மனிதனது ஆயுட்காலமே குறைவானது, அதிலும் நோயற்ற வாழ்வை வாழ்ந்து முடிக்க மனித ஆயுட்காலம் நிகரல்ல என்பது நாம் அறிந்த விடயமாகும்.

ஆனால் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் 21 ஆம் நூற்றாண்டின் காலப் பகுதியில் பல்வேறு நோய்களுக்கும் தீர்வு மருத்துவமாக காணப்படுகிறது. இதிலும் இவ் உலகில் எந்தவிதமான நோய்களுக்கும் நாடுவது ஆங்கில மருத்துவமே. சொல்லப் போனால் பெரும்பாலானோருக்கு ஆயுள்வேத மருத்துவம் என இருப்பது கூட தெரிவதில்லை.

தொழில்நுட்ப வசதியால் முன்னிலையில் ஆங்கில மருத்துவம் காணப்படுகிறது. புதிதாக வந்த ஆங்கில மருத்துவத்தை நாடுகின்றவர்களுக்கு பாரம்பரியமாக காணப்படுகின்ற சித்த ஆயுள்வேத மருத்துவத்தினோ அல்லது அவற்றின் சிறப்பு பற்றியோ தெரிவதில்லை. காரணம் நவீன தொழில்நுட்ப வசதி. ஆங்கில மருத்துவத்தை பெறுவதற்கு பல இலட்சங்கள் தேவைப்படுகிறது. ஆதலால் ஆங்கில மருத்துவத்தை பெறுபவர்கள் (நாடுபவர்கள்) செல்வங்களை கொண்டவராக மட்டுமே இருக்க வேண்டும். இதனால் ஏழை மக்கள் அதாவது செல்வங்களை கொண்டிராதவர்கள் தாழ்த்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றனர். இதன் காரணத்தால் ஏழை மக்கள் இலவசமாக வழங்கப்படுகின்ற மருத்துவமான "சித்த ஆயுள்வேத மருத்துவத்தையே" பெரிதும் நாடுகின்றனர். அவர்கள் கூட பணவசதி இல்லை என்பதனால் தான் நமது பாரம்பரிய சித்த மருத்துவத்தை நாடுகின்றனர்.

இதற்காக சித்த மருத்துவம் ஒன்றும் குறைந்தது அல்ல. முனிவர் காலத்திலேயே சித்த மருத்துவம் காணப்பட்டது. சித்த மருத்துவத்தை ஆரம்பகால மனிதன் பெற்றதால் தான் அவர்களுக்கு எந்தவித நோய்களும் அற்று ஆயுள் நாட்கள் கூடிய வாழ்வை வாழ்ந்தார்கள். சித்த மருத்துவத்தில் எந்தவிதமான செயற்கை பொருட்களோ இரசாயனப் பொருட்களோ சேர்ப்பதில்லை. முழுக்க முழுக்க இயற்கையான பொருட்களாலும் மூலிகைகளாலுமே ஆக்கப்பட்டது. ஆங்கில மருத்துவத்தினால் சில சில பின் விளைவுகள் காணப்படுகின்ற போதிலும் நமது சித்த ஆயுள் வேத மருத்துவத்தினால் அவ்வாறான பின்விளைவுகள் காணப்படுவதில்லை.

சித்த மருத்துவத்திற்கு இவ்வளவு பெருமை இருக்க காரணம் சித்த மருத்துவத்தின் தந்தை அகத்தியருக்கு உடையதே. நமது முன்னோர்கள் நமக்காக தந்து விட்டுப் போன ஆயுள் வேதத்தினை பின்பற்றி நோய்களற்ற வாழ்வை வாழ்வோமாக!

சித்த ஆயுள்வேத மருத்துவத்தை போற்றுவோம்!

வாழ்வை வளமாக்குவோம்!!

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 108

**2. நீண்ட போர்**

இதற்கான சாத்தியங்கள் ஒரு வேளை அதிகமாக இருக்கலாம். மன உறுதி குறைவது மற்றும் மோசமான தளபாடங்களுடன் ரஷ்யப் படைகள் சிக்கிக் கொள்ளலாம். கைப்பற்றப்பட்ட நகரங்களைக் கூட அவை கட்டுப்படுத்தப் போராடலாம். அதேநேரத்தில் மேற்கு நாடுகள் தொடர்ந்து ஆயுதங்களை வழங்கலாம். ஒருவேளை பல ஆண்டுகளுக்குப் பிறகு ரஷ்யா இறுதியில் வெளியேறலாம்.

**3. ஐரோப்பிய போர்**

நேட்டோவின் உறுப்பினராக இல்லாத மோல்டோவா மற்றும் ஜார்ஜியா போன்ற முன்னாள் சோவியத் குடியரசுகளுக்கு புடின் படைகளை அனுப்ப முடியும். தனது தலைமையைக் காப்பாற்றுவதற்கான ஒரே வழி என்று புடின் கருதினால் இதைக் கையில் எடுக்கலாம். ஒருவேளை அவர் தோல்வியை எதிர்கொண்டால் அது அவரை மேலும் அதிகமாகச் செயலாற்றத் தூண்டலாம்.

**4. ராஜீயத் தீர்வு**

ஏற்கெனவே பேச்சு வார்த்தைக்கு ஒப்புக் கொண்டதன் மூலம் அவர்கள் அதிக் முன்னேற்றம் அடையவில்லை. இருப்பினும் புடின் குறைந்த பட்சம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சாத்தியத்தை ஏற்றுக் கொண்டதாகத் தெரிகிறது. போர் அவருடைய தரப்புக்கு மோசமாகச் சென்றால் அதைத் தொடர்ந்து கொண்டு செல்வது அவரின் தலைமைக்குப் பெரிய அச்சுறுத்தல் என்று கருதி அதை முடிவுக்குக் கொண்டுவர நினைக் கலாம்.

**5. புடின் வெளியேற்றப்படலாம்**

இப்படியொரு முடிவு சிந்திக்க முடியாத ஒன்றாகத் தோன்றலாம். ஆனால், சமீப நாட்களில் உலகம் மாறிவிட்டது. போர் ரஷ்யாவிற்கு பேரழிவை ஏற்படுத்தினால் மக்கள் புரட்சி செய்யும் அச்சுறுத்தல் ஏற்படலாம். புடினிடம் இருந்து பயனடைந்தவர்கள் இனி அவரால் தங்கள் நலன்களைப் பாதுகாக்க முடியாது என்று கருதினால் அத்தகைய விளைவு நம்ப முடியாததாக இருக்காது.

**உக்ரைன் மரியுபோல் நகரில் ரஷ்யா இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தியதா?**

உக்ரைன் மரியுபோல் நகரில் ரஷ்யப் படையினர் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதாகக் கூறப்படுவது குறித்து ஆராய்ப் போவதாக அமெரிக்காவும் பிரிட்டனும் தெரிவித்துள்ளன. உக்ரைன் அசோவ் பகுதியில் உள்ள படைப்பிரிவு மீது நடந்த தாக்குதலில் மூன்று இராணுவ வீரர்கள் "விஷத் தன்மை கொண்ட பொருளால்" காயமடைந்ததாகக் கூறியுள்ளனர்.

ஆனால், இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதை உறுதி செய்யும் வகையில் ஆதாரங்கள் எதுவும் சமர்ப்பிக்கவில்லை. ரஷ்யா இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தினால் அது இந்தப் போரை ஆபத்தான நிலைக்குக் கொண்டு செல்லும் என்று மேற்கத்தேய நாடுகள் எச்சரித்துள்ளன. அத்தகைய தாக்குதல்களை ரஷ்யா மேற்கொண்டால் கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்றும் அந்நாடுகள் உறுதி அளித்துள்ளன.

**உக்ரைன் - ரஷ்யப் போர்: விவசாயத் துறையின் பாதிப்புகள்**

இரு நாடுகளும் தங்களிடையே பல வளங்களை உள்ளடக்கியுள்ளன. பிரதானமாக வேளாண்மையை எடுத்துக்கொண்டால் இரு நாடுகளுமே பயிர்ச் சாகுபடியிலும் உற்பத்தியிலும் பெரும்பங்கு வகிக்கின்றன. உக்ரைனை எடுத்துக் கொண்டால் நல்ல கரிம வளம் கொண்ட மண்ணில் சூரியகாந்தி, மக்காச்சோளம், கோதுமை, பார்லி போன்றவை அதிக அளவு சாகுபடி செய்யப்படுகின்றன. குறிப்பாக, சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தியில் உலக அளவில் உக்ரைன் முதலிடம் வகிக்கிறது. அதனால் தானோ என்னவோ சில நாட்களுக்கு முன்பு உக்ரைன் பெண்மணி ஒருவர் அங்கு போரிட்டு வரும் ரஷ்ய இராணுவ வீரரிடம் 'உங்களின் பாக்கெட்டுகளில் இந்த சூரியகாந்தி விதைகளை வைத்துக் கொள்ளுங்கள். ஒருவேளை நீங்கள் இறக்க நேரிட்டால் இந்த விதைகள் செடிகளாக உக்ரைன் மண்ணில் வளரும்' என்று பேசிய ஒரு காணொளி இணையத்தில் வைரலாக வலம் வந்தது. மேலும் உக்ரைன் ஐரோப்பாவின் 'பாண் கூடை' என்றும் அழைக்கப்படுகிறது.

போர் காரணமாக உரங்களுக்கும் சில உணவு தானியப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் எழுந்துள்ளது. எகிப்து, துருக்கி, நைஜீரியா, சில ஆபிரிக்க நாடுகளின் கோதுமைத் தேவையை இவ்விரு நாடுகளே பூர்த்திசெய்து வருகின்றன. இந்தியாவை எடுத்துக்கொண்டால் 90% சூரியகாந்தி எண்ணெய்த் தேவையை இவ்விரு நாடுகளே நிறைவு செய்கின்றன. தற்போது சந்தையில் அதன் விலையும் அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. உக்ரைனில் தற்போது குளிர் காலத்துக்கு ஏற்ப சாகுபடி செய்யப்பட்டுள்ள 20% முதல் 30% அளவிலான பயிர்கள் போரின் காரணமாக அறுவடை செய்யப்படாமல் அப்படியே நிலத்தில் உள்ளன.

(தொடரும்...)

## உகண்டாவில்
## பார்வையற்றோர் பாடசாலையில் தீ விபத்து
# 11 பேர் உடல் கருகி உயிரிழப்பு

(கம்பாலா)

உகண்டாவில் பார்வையற்றோர் பாடசாலையில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆபிரிக்க நாடான உகண்டாவின் தலைநகர் கம்பாலா அருகில் முகோனா என்ற இடத்தில் பார்வையற்றோருக்காக சலாமா என்ற பெயரில் ஒரு பாடசாலையொன்று இயங்கி வருகிறது.



குறித்த பாடசாலையில் கடந்த திங்கட்கிழமை அதிகாலையில் திடீரென தீப்பிடித்து பாடசாலை முழுவதும் பரவியுள்ளது. இதுகுறித்து தகவல் அறிந்ததும் தீயணைப்புப் படையினர் விரைந்து சென்று தீயை போராடி அணைத்துள்ளனர்.

இருப்பினும் இந்தத் தீ விபத்தில் 11 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர். படுகாயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு அங்குள்ள ஹெரோனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் உகண்டாவில் பாடசாலைகளில் தீ விபத்துகள் இடம்பெறுவது வழமையாகியுள்ள நிலையில் இந்தத் தீ விபத்தும் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# கிளிமஞ்சாரோ மலையில் மீண்டும் தீ

(தன்சானியா)

தன்சானியாவின் புகழ்பெற்ற கிளிமஞ்சாரோ மலையில் மீண்டும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கடல் மட்டத்தில் இருந்து 5 ஆயிரத்து 895 மீற்றர் உயரமுள்ள ஆபிரிக்காவின் மிக உயரமான மலையான கிளிமஞ்சாரோ மலையின் தெற்குப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை தீ விபத்து ஏற்பட்டது.

தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் 3 இடங்களில் மீண்டும் காட்டுத்தீ பற்றி எரிந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பூசணிக்காய் படகுப்போட்டி



(பெல்ஜியம்)

பெல்ஜியத்திலுள்ள காஸ்டர்லீயின் லிச்டார்ட் கிராமத்தில் அண்மையில் விசித்திரமான படக்குப் போட்டி ஒன்று இடம்பெற்றுள்ளது.

பாரிய இராட்சத பூசணிக்காய்களை மக்கள் காட்சிப்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு பூசணிக்காயின் எடையும் நூற்றுக்கணக்கான கிலோகிராம்களை கொண்டுள்ளன.

பின்னர் அந்தப் பூசணிக்காய்களின் நடுவே குழி அமைத்து அதனைப் படகு போன்று பயன்படுத்தி சவாரி செய்துள்ளனர். (நி)

# அழுக்கான மனிதர் காலமானார்



(ஷெஹ்ரான்)

உலகிலேயே மிகவும் அழுக்கான மனிதராக கருதப்பட்ட ஈரானைச் சேர்ந்த நபர் உயிரிழந்துள்ளார். 94 வயதான அமோ ஹாஜி, குளித்தால் நோய் வாய்ப்பட்டு விடுவோம் என்ற அச்சத்தில் 50 ஆண்டுகளாக குளிக்காமல் இருந்தார். திருமணம் செய்யாமல் தனித்து வாழ்ந்து வந்த அவர், உயிரிழந்துள்ளதாக ஈரான் அரசு தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நிலைமை மேலும் மோசமடையும்

## உலக உணவுத் திட்டம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் நிலைமை மேலும் மோசமடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக உலக உணவுத் திட்டம் எச்சரித்துள்ளது.

இலங்கையில் உக்கிரமடைந்து வரும் பொருளாதார நெருக்கடியானது உணவுப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக தொடர்ந்தும் இருப்பதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த வகையில் 2022 ஒக்டோபர் முதல் 2023 பெப்ரவரி வரையான பருவத்தில் தொடர்ச்சியான உதவி இல்லாமல் நிலைமை மோசமடையக்கூடும் என்று உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது.(நி)

# புற்றுநோய்க்கான மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு

(கொழும்பு)

மருத்துவமனைகளிலும் ஏனைய சுகாதார நிலையங்களிலும் புற்றுநோய் சிகிச்சைக்காக பயன்படுத்தப்படும் மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரசாங்க மருந்தாளர் சங்கத்தின் தலைவர் அஜித் பீ.திலகரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மருந்துப் பற்றாக்குறை காரணமாக புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுகளில் அதிகளவான நோயாளிகள் இக்கட்டான நிலையில் உள்ளனர். அதனால் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுகள் மூடப்படும் நிலை உள்ளன.

இதுவரை 15 மருந்துகள் அரச மருத்துவமனைகளில் கிடைக்காததால் நோயாளிகள் அதிக விலை கொடுத்து தனியார் மருந்தகங்களில் அவற்றை வாங்க வேண்டியுள்ளது.

அரச மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் (என்.எம்.ஆர்.ஏ) மருந்துகளின் விலையை அவ்வப்போது உயர்த்துகிறது.

இதனால் புற்றுநோயாளிகளுக்குப் பயன்படுத்தப்படும் ஒரு குப்பியின் போன்ற மருந்துகளின் விலை 300,000 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

இந்தநிலையில் மருத்துவத் துறையின் மூலம் இந்த பற்றாக்குறை மருந்து வகைகளை நிரப்புவதற்கான சரியான திகதி எதுவும் இதுவரை அறிவிக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# உயிர்கொல்லி ஹெரோயினுடன் 24 பேர் கைது- நிஹால் தல்துவ



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்புகளின் போது உயிர்கொல்லி ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டுக்களின் கீழ் 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் உட்பட கொழும்பு,மொனராகலை, அநுராதபுரம், வவுனியா, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் கடந்த இரு நாட்களில் (24, 25 ஆம் திகதிகள்)குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# மின்கம்பங்களை சேதப்படுத்திய பாரிய கொள்கலன்



(திருமலை)

திருகோணமலை - அநுராதபுரம் பிரதான வீதியில் துவரங்காடு சந்தியில் ஏற்பட்ட வாகன விபத்தில் இருவர் பலத்த காயங்களுடன் திருகோணமலை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்தின் காரணமாக மின்கம்பம் மற்றும் மின்கம்பிகள் சேதமடைந்ததால் திருகோணமலையின் பரவலான பகுதிகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை திருகோணமலை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(நி)

# திடீரென தீப்பிடித்து எரிந்த முச்சக்கரவண்டி



(ஹற்றன்)

ஒரே குடும்பத்தினர் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தீப்பிடித்து எரிந்துள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து முச்சக்கரவண்டிக்கு எரிபொருளை நிரப்பிக் கொண்டு நுவரெலியா லவர்ஸ்லிப் பகுதியில் உள்ள தனது வீட்டை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போதே நுவரெலியா பேருந்து நிலையத்திற்கு அருகில் இவ்வாறு முச்சக்கரவண்டி தீப்பற்றி எரிந்துள்ளது. முச்சக்கரவண்டி இவ்வாறு தீப்பற்றி எரிந்த போது முச்சக்கர வண்டிக்குள் தாய், தந்தை மற்றும் மகளும் பயணித்துக் கொண்டிருந்ததுடன் தந்தையே முச்சக்கரவண்டியை செலுத்தியதாகவும் தெரிய வந்துள்ளது.

குறித்த மூவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்வும் இந்தத் தீ விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.(நி)


பதவி வெற்றிடம்

சிங்களம் சரளமாகப் பேசத் தெரிந்த பெண் உத்தியோகத்தர் தேவை

யாழ்.நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை.

தொடர்பு:- 076 097 3121


### மற்றொரு அரிசித்தொகுதி சீனாவில் இருந்து இலங்கைக்கு

(கொழும்பு)

சீனாவினால் நன்கொடையாக வழங்கப்பட்ட மற்றொரு அரிசித் தொகுதி இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நவி யோஸ் ஜாஸ்மின் கொள்கலன் கப்பலில் 500 மெற்றிக் தொன் அரிசி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததாக கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த அரிசியின் வருகையை அடுத்து சீனா இலங்கைக்கு வழங்கிய மொத்த உதவித் தொகை 6,000 மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளதாக தூதரகம் தெரிவித்துள்ளது. (நி)


பதவி வெற்றிடம்

ஒப்புநோக்குநர் (ஆண்கள்)

- இரவுக்கடமை

- யாழ்.நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை.
- வயதெல்லை 35க்கு மேல்

தொடர்பு:- 076 097 3121


## அறிவித்தல்

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

### மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை

**வட்டாரம்-01**
**ஆதன இலக்கம்- 144/ 6 A**
**சுதுமலை வீதி**

வட்டாரம் 01,சுதுமலை வீதி,ஆதன இலக்கம் 144/6A இல் அமைந்துள்ள உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில் பற்று சுதுமலை இறை **"சான்றான் தோட்டம்"** என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 03 குழி 14.92 கொண்ட இவ்வாதனமானது மானிப்பாயைச் சேர்ந்த முருகேசு விஜயமோகன் அவர்களால் அதே இடத்தைச் சேர்ந்த நேசராசா தபேந்திரன் என்பவருக்கு பிரசித்த நொத்தாரிஸ் திரு. அருட்பிரகாசம் நிறோசன் முகதாவில் நிறைவேறிய 81 ஆம் இலக்க 2021.03.14 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனமானது தம்க்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். எமது ஆதனப் பதிவேட்டின்படி மருதப்பு கந்தையா என காணப்படுகின்றது. இவ்வாதனத்தின் தாயுறுதியானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.சோமசுந்தரம் திருநாவுக்கரசு முகதாவில் நிறைவேறிய 7542 ஆம் இலக்க 1958.09.11 ஆம் திகதிய நன்கொடை உறுதிப்படி குறித்த மருதப்பு கந்தையா சொத்துறுதியின்றியும் வாரிசுகளின்றியும் பெற்றோர்களின்றியும் இறக்க அவர்களின் சகோதரர்களாகிய மருதப்பு முருகேசு, மருதப்பு பொன்னுத்துரை ஆகியோரும் இறக்க முருகேசுவின் மகனான முருகேசு விஜயமோகன் ஆகிய தனக்கு வந்தடைந்துள்ளது என வெளிப்படுத்தல் உறுதி முடித்துள்ளார். நில அளவையாளர் திரு.வி.பிரணவன் அவர்களால் வரையப்பட்ட 1168 ஆம் இலக்க 2022.09.09 ஆம் திக்திய நில அளவைப்படத்தின் பிரகாரம் **"சான்றான் தோட்டம்"** நிலப்பரப்பு 03 குழி 14.92 கொண்ட இவ்வாத்னத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக பிரசுரத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து **நேசராசா தபேந்திரன்** என்பவருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை (மானிப்பாய்) பொறுப்பாளி ஆகாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(13260)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு செய்ததைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்; இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்யா திருத்தல் பற்றியே கவலைப்பட வேண்டும்.

*– அலன் தார்ன்ஹில்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிரம்மகத்திதோசம் நீங்க இராமபிரான் செய்த வழிபாடு

தெய்வப் புலவர் என்று போற்றப்பட்ட திருவள்ளுவர் 1330 திருக்குறளை நமக்குத் தந்தருளினார்.

வள்ளுவர் தந்த திருக்குறள் ஒருபோதும் பொய்க்கமாட்டா என்பது சத்தியமானது.

அறம், பொருள், இன்பம் என்ற வகைப்படுத்தலூடு வாழ்வியலின் அத்தனை விடயங்களையும் தந்த வள்ளுவர் ஊழ்வினை வந்துறுத்தும் என்றார்.

ஆம், நாம் செய்த கன்மவினைப் பயன் எங்கள் மீது நிச்சயம் தாக்கம் செலுத்தும் என்பது நிறுதிட்டமான உண்மை.

ஊழ்வினைப் பயன் அவதார புருசர்களைக்கூட விட்டு வைக்காதென்பதற்கு பல உதாரணங்களைக் கூறலாம்.

இலங்கை மீது போர்தொடுத்து இராவணேஸ்வரனை வதம் செய்த இராமபிரான் கொலைப் பாவம் தன்னைத் தீண்டும் என அச்சம் கொண்டார்.

அதிலும் பிராமணர்களைக் கொலை செய்வதால், அது பிரம்மகத்தி தோசமாகும்.

ஆக, தன் மனையாளைக் கடத்தி வந்த இராவணேஸ்வரன் அறம் பிழைத்தானாயினும் அவனைக் கொன்றதால் தன்னைப் பிரம்மகத்தி தோசம் தீண்டும் என அச்சம் கொண்ட இராமன் பிரமகத்திதோசத்தினின்றும் விடுதலை பெற சிவவழிபாடு செய்தார் என்பதை இராமாயண இதிகாசம் குறித்துரைக்கிறது.

இந்த அடிப்படையில் இலங்கையைப் பீடித்துள்ள கன்மா சதாரணமானதல்ல.

யுத்தத்தில் அகப்பட்டு உயிரிழந்துபோன தங்கள் உறவுகளை நினைந்துருகுகின்றவர்களின் அனல் மூச்சு,

காணாமல்போன பிள்ளைகளைத் தேடி அலைகின்ற தாய்மாரின் கண்ணீர் என எல்லாமும் சேர்ந்து இந்த நாட்டின் செல்வத்தை அழித்துவிட்டது.

இதைக்கூட வள்ளுவர்

*அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றோ*
*செல்வத்தைத் தேய்க்கும்படை*

என்றார்.

இதற்கும் மேலாக, இந்த நாட்டில் உடைக்கப்பட்ட சிவாலயங்கள், கொல்லப்பட்ட சிவாச்சாரியர்கள், ஆக்கிரமிக்கப்பட்ட சைவக்கோயில்கள் என்ற பாவவினை சூழ்ந்திருப்பதால் அதன் தோசம் இந்த நாட்டைக் கந்தறுக்கிறது.

இந்த இடத்தில்தான் தீபாவளித் தினத்தன்று ஜனாதிபதி மாளிகையில் நந்திக்கொடி ஏற்றப்பட்ட ஒருபெரும் நிகழ்வு நடந்திருக்கிறது.

இது சிவ நிந்தனையில் இருந்து விடுபடுகின்ற தோச நிவாரணமாக சம்பந்தப்பட்டவர்கள் கருதினாலும் தங்கள் பிள்ளைகளை இழந்து தவிக்கின்ற தாய்மாரின் கண்ணீருக்கு நீதி வழங்காவிட்டால் அந்தத் தோசம் பிரம்மகத்தி தோசத்திலும் பன்மடங்கானதென்ற உண்மையை ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

## மக்களை வாழ வைக்கும் போராட்டம் மேற்கொள்ள வேண்டும்

### அகிலவிராஜ் காரியவசம்

கட்சி பேதம் இன்றி மக்களை வாழ வைக்கும் போராட்டத்தையே அனைவரும் மேற்கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அகிலவிராஜ் காரியவசம் இதனைத் தெரிவித்தார்.

நாட்டு மக்களைப் போலவே நாட்டின் எதிர்காலத்தையும் கஷ்டப்படுத்தும் போராட்டமாக இருந்தால் நாட்டுக்கு எந்தப் பயனும் இல்லை என அவர் குறிப்பிட்டார்.

இந்நாட்டு மக்கள் புத்திசாலித்தனமாகவும் தீர்க்கமாகவும் சிந்திக்க வேண்டிய காலகட்டம் இது என அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

எரிவாயு வரிசைகள், மின்வெட்டு, பொருட்களின் விலையேற்றம் போன்ற பிரச்சினைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றிகரமாக கையாண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். (ம-7)

## பாவனைக்கு உதவாத புளி; கைதானவர் மறியல்

யாழ். நகரில் மனிதப் பாவனைக்குதவாத நிலையில் பழப்புளியை வைத்திருந்த களஞ்சிய உரிமையாளரை இரண்டு வாரங்கள் விளக்கமறியலில் வைக்கவும், கைப்பற்றப்பட்ட பழப்புளியை அழிக்கவும் யாழ்ப்பாண மேலதிக நீதவான் நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசல் வீதியில் உள்ள களஞ்சியம் ஒன்றில் 6000 கிலோகிராம் வரையான மனிதப்பாவனைக்கு உதவாத பெருந்தொகையான பழப்புளியை அருவருக்கதக்க வகையில் சுகாதாரமின்றி பொதியிட்டுக் கொண்டிருந்தநிலையில்,நேற்று முன்தினம் மாலை பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவினரால் களஞ்சியம் முற்றுகையிடப்பட்டது.

களஞ்சிய உரிமையாளருக்கு எதிராக நேற்று யாழ்ப்பாண மேலதிக நீதவான் நீதிமன்றில் யாழ். நகர பொதுச்சுகாதார பரிசோதகர் சஞ்ஜீவனால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் களஞ்சிய உரிமையாளரை இரண்டு வாரங்கள் விளக்கமறியலில் வைக்கவும், கைப்பற்றப்பட்ட பழப்புளியை அழிக்கவும் யாழ்ப்பாண மேலதிக நீதவான் நளினி சுபாஸ்கரன் உத்தரவிட்டதுடன் எதிர்வரும் 9 ம் திகதி வரை குறித்த வழக்கை நீதவான் ஒத்தி வைத்து உத்தரவிட்டார். (ம-7,33)

## விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

2023 ஆம் ஆண்டின் திறமை மேம்பாட்டு நிகழ்ச்சிகளுக்கு வளவாளர்களை (ஆசிரியர்கள்) இணைத்துக் கொள்வதற்காக புத்த சாசனம், மதம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் சுற்றுநிருபத்திற்கமைவாக சங்கானைப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சங்கானைக் கலாசார மத்திய நிலையத்திலும் கிராம மட்டங்களிலும் கர்நாடக மற்றும் கிராமிய சங்கீதம், கர்நாடக மற்றும் கிராமிய நடனம், சித்திரம் மற்றும் ஓவியக் கலை, நாடகமும், அரங்கியலும், மிருதங்கம், வயலின் ஆகிய வகுப்புக்களைப் பகுதிநேரமாகப் பயிற்றுவிப்பதற்குரிய ஆசிரியர்களை நியமிப்பதற் கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சங்கானைப் பிரதேச எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையினை (தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக) 15.11.2022 ஆம் திகதிக்கு முன்னதாக "கலாசார மத்திய நிலையம், பட்டினசபை வீதி, சங்கானை" எனும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறும் நேர்முகத் தேர்வுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என கலாசார மத்திய நிலைய பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (4)

## HIV தொற்றாளர்கள் இரட்டிப்பாக அதிகரிப்பு

### எயிட்ஸ் தடுப்பு பிரிவு பணிப்பாளர்

(கொழும்பு)

நாட்டில் HIV தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.

கடந்த வருடம் முதலாவது அரையாண்டுக்குள் 148 HIV தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதாக தேசிய பாலியல் மற்றும் எய்ட்ஸ் தடுப்புப்பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் ராசாஞ்சலி ஹெட்டியாரச்சி குறிப்பிட்டார்.

எனினும், இந்த வருடம் 342 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களிலேயே அதிக HIV தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக விசேட வைத்திய நிபுணர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் 18 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களில் 25 பேர் மாத்திரமே அடையாளம் காணப்பட்ட நிலையில், இந்த வருடம் 50 இற்கும் அதிகமான HIV தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தொற்றுக்குள்ளானவர்களில் பெரும்பாலானோர் ஆண்கள் எனவும் அவர்களில் பல்கலைக்கழக மாணவர்கள் 13 பேர் மற்றும் பாடசாலை மாணவர்கள் அடங்குவதாக விசேட வைத்திய நிபுணர் ராசாஞ்சலி ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

பாடசாலைகளில் பால் நிலை கல்வியை உரிய முறையில் பெற்றுக் கொடுக்காமையே இவ்வாறான தொற்று நோய்கள் அதிகம் பரவுவதற்கு காரணம் என அவர் கூறியுள்ளார்.

HIV தொற்று ஏற்பட்டிருக்கக்கூடும் என சந்தேகிக்கும் நபர்கள் உடனடியாக மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வது சிறந்தது என தேசிய பாலியல் மற்றும் எய்ட்ஸ் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் ராசாஞ்சலி ஹெட்டியாரச்சி சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## தனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியாது

### விமல் வீரவன்ச

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் 75 மில்லியனுக்கும் அதிகமான சொத்துக்களை சம்பாதித்ததாக தெரிவித்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் மீது விசாரணைகளை மேற்கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச சார்பில் கொழும்பு மேல் நீதிமன்றில் முதல் கட்டமாக ஆட்சேபனை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல்ஆணைக்குழு சட்டத்தின் கீழ் அரச அதிகாரிகளுக்கு மாத்திரமே இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கமுடியும் என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களுக்கோ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கக முடியாது என சட்டத்தரணி மேலும் தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணிகளின் கருத்துக்களை ஆராய்ந்த நீதிமன்றம் வழக்கினை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை ஒத்தி வைத்துள்ளது. (ம-7)

## 4000 பொலிஸ் அதிகாரிகள் தகுதி அற்றவர்கள்

பொலிஸ் திணைக்களத்தில் சுமார் 4000 அதிகாரிகள், நீண்டகாலமாக போதிய உடற்திறன் இன்றி உள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன தெரிவித்தார். பொது பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் குழு கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் அறிவித்தார்.

பல உத்தியோகத்தர்கள் மருத்துவ சான்றிதழ்களை சமர்ப்பித்ததை தொடர்ந்து கடினமான பணிகளில் ஈடுபடுவதில்லை எனவும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

சுகாதார மட்டத்தில் இல்லாத பொலிஸ் உத்தியோகத்தர்கள் சேவையில் இருந்து நீக்கப்படுவார்கள் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குறித்த கூட்டத்தில் குறிப்பிட்டார்.

இது தொடர்பான முன்மொழிவை அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூநகரி பிரதேசத்தில்

# ஊட்டச்சத்து குறைபாட்டுடன் அதிகளவு சிறார்கள்

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவிலேயே ஐந்து வயதிற்குட்பட்ட அதிகளவான சிறார்கள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.**

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, பொருட்களின் விலையேற்றம் மற்றும் தொழில் இழப்பு என்பவற்றால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் இவ்வாறான குடும்பங்களைச் சேர்ந்த சிறார்கள், முதியவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஐந்து வயதிற்குட்பட்ட 576 வரையான சிறார்கள் ஊட்டச்சத்து குறைபாடுகளுடன் காணப்படுவதாக பிரதேச செயலகங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களில் கண்டறியப்பட்டுள்ளது.

அதாவது கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 48 சிறார்களும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 128 சிறார்களும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 108 சிறார்களும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 292 சிறார்களுமாக சுமார் 576 வரையான ஐந்து வயதிற்குட்பட்ட சிறார்கள் இவ்வாறு ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டிருப்பதாக கண்டறியப்பட்டுள்ளதுடன் இதில் பூநகரி பிரதேசத்திலேயே அதிகளவான சிறார்கள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வறுமைக்கோட்டின் கீழ் நாளாந்த தினக்கூலி வேலை செய்து வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டிருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. (4-315)

# சட்டவிரோத மணல் அகழ்வு வலி.வடக்கில் அதிகரிப்பு

(அராலி)

வலி.வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட வறுத்தலைவிளான் பிள்ளையார் குளத்தில் பாரிய மண் அகழ்வு இடம்பெற்று வருகிறதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவது, குறித்த பிள்ளையார் கோயிலின் குளத்தில் இருந்து தனியார் ஒருவர் குளத்தில் தாமரை வளர்க்கப் போவதாக தெரிவித்து குளத்தில் இருந்து சுமார் 200 லோட்டுக்கு அதிகமான மணலை வெளி இடங்களில் விற்பனை செய்து வருவதாக அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மணல் அகழ்பவர்களை கேட்டதற்கு பிரதேச சபை தவிசாளர் தமக்கு அனுமதி தந்ததாக தெரிவித்தே மணல் ஏற்றிச் சென்றதாகத் தெரிவித்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சுகிர்தனை தொடர்பு கொண்டு கேட்டபோது குறித்த குளம் கமநல சேவைத் திணைக்களத்தின் கீழ் வருவதாகவும் மண் அகழ்வுக்கு தாம் அனுமதி வழங்கவும் இல்லை வழங்கவும் முடியாது எனத் தெரிவித்தார். (4-104)

# பருத்தித்துறையில் மோதல் 11 பேர் பொலிஸாரால் கைது

(கரணவாய்)

இலங்கை போக்குவரத்து சபையின் பருத்தித்துறை சாலையில் இரு பகுதியினருக்கு இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பாக 11 பேர் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை சாலையில் முகாமையாளராக இருந்து இடம் மாற்றப்பட்ட ஜீவானந்தம் என்பவர் மீள பருத்தித்துறை சாலைக்கு வந்தமைக்கு எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டன.

அவரை நீக்குமாறு கோரி நேற்று புதன்கிழமை காலை அவர் மீது தொழிற்சங்கத்தை சேர்ந்த ஏழு பேர் தாக்குதல் மேற்கொண்டதாக முகாமையாளராக இருந்த ஜீவானந்தம் என்பவர் முறைப்பாட்டு செய்தார். ஜீவானந்தம் தரப்பினினால் தொழிற்சங்கத்தை சேர்ந்த 4 பேர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனை விசாரித்த பொலிஸார், தொழிற்சங்க தரப்பைச் சேர்ந்த ஏழு பேரையும் ஜீவானந்தம் தரப்பைச் சேர்ந்த 4 பேருமாக மொத்தம் 11 பேரை கைது செய்துள்ளனர். (4-60)

# விண்ணப்பங்கள் கோரல்

(கரணவாய்)

மருதங்கேணி கலாசார மத்திய நிலையத்தில் வளவாளர்களுக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது.

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் மருதங்கேணிப் பகுதியில் அமைந்திருக்கும் கலாசார மத்திய நிலையம் மற்றும் கிராமிய நிலையங்களில் கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், சித்திரமும் வடிவமைப்பும், நாடகமும் அரங்கியலும் மற்றும் இசை வாத்தியக்கருவிகள் ஆகிய பாடநெறிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே குறித்த பாடநெறிகளைக் கற்பிக்க ஆர்வமுடைய மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வளவாளர்கள் (ஆசிரியர்கள்) தங்களது சுயவிபரங்களை எதிர்வரும் 12.11.2022 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம், பிரதேச செயலக அருகாமை, மருதங்கேணி எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்புமாறு நிலையப் பொறுப்பதிகாரி த.அமல்ராஜ் அறிவித்துள்ளார்.

மேலும் தொடர்புகளுக்கு 0779191692 எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-60)



யா/மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆரம்பப் பிரிவு மாணவர்களின் மாதிரி சந்தை நிகழ்வு பாடசாலை பிரதான மண்டபத்தில் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்றது. (படம்: மகாலிங்கம்)

# முல்லையடியைச் சேர்ந்த இளைஞன் மீது கத்தி வெட்டு

(தரும்புரம்)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முல்லையடி பகுதியில் அதே கிராமத்தைச் சேர்ந்த இளைஞன் நேற்று முன்தினம் வீட்டிற்குச் சென்ற வேளை இனந்தெரியாத நபரால் கத்தி வெட்டுக்கு இலக்காகி உள்ளார்.

காயத்திற்குள்ளான இளைஞன் பளை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

குறித்த இளைஞன் மீது தாக்குதலை மேற்கொண்டதாக பளையைச் சேர்ந்த குடும்பஸ்தர் பளை பொலிஸ் நிலையத்தில் நேற்று சரணடைந்துள்ளதாகவும் தனிப்பட்ட தகராறு காரணமாகவே குறித்த சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என பளை பொலிஸார் தெரிவித்தனர். (4-316)



வத்திராயன் வடக்கு, தாளையடி, யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த சிறுதொழில் முயற்சியாளர்களால் உருவாக்கப்பட்ட தையலகம் ஒன்றிற்கு அத்தொழிலை ஊக்குவிக்கும் முகமாக யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணனால் ஒரு தொகுதி துணி வகைகள் கையளிக்கப்பட்டன. (படம்:மகாலிங்கம்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 380 | 400 | 350 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 250 | 250 |
| தக்காளி | 350 | 300 | 350 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 150 | 140 | 200 |
| கோவா | 280 | 250 | 280 | 350 |
| கரட் | 350 | 400 | 400 | 450 |
| பூசணி | 200 | 200 | 200 | 200 |
| புடோல் | 250 | 200 | 180 | 200 |
| வாழைக்காய் | 180 | 150 | 140 | 160 |
| சின்ன வெங்காயம் | 450 | 450 | 550 | 500 |
| பெரிய வெங்காயம் | 270 | 250 | 220 | 280 |
| பாகற்காய் | 700 | 600 | 600 | 800 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 120 | 250 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 140 | 200 |
| பயற்றங்காய் | 600 | 650 | 550 | 500 |
| லீக்ஸ் | 300 | 300 | 280 | 350 |
| பீற்றூட் | 180 | 200 | 260 | 300 |
| கறிமிளகாய் | 550 | 700 | 700 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 450 | 400 |
| போஞ்சி | 400 | 350 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 320 | 200 | — | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 120 | 150 |
| தேசிக்காய் | 600 | 700 | 600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 65 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 600 | 400 | — | 450 |
| முள்ளங்கி | 140 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 120 | 150 | 80 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டமைப்பு...

தெரிவித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்ட ஒருவர் தேர்தலில் போட்டியிட முன்வந்து, அது தொடர்பில் யாராவது ஆட்சேபத்தை தெரிவித்தால் அவரது பெயரை நிராகரிக்கின்ற அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படவில்லை.

ஏனெனில் அவ்வாறான ஆட்சேபனைகளை விசாரித்து உண்மைகளை கண்டறிய அவர்களுக்கு கால அவகாசம் போதாது. அதன்பிறகு அவர்கள் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டால் நீதிமன்றத்தின் ஊடாக அதனை கேள்விக்குட்படுத்தி அவரது பதவியை பறிக்க முடியும். கீதா குமாரசிங்கவின் விடயத்திலும் இதுவே நடந்தது.

இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பதில் நாங்கள் ஆராய்ந்து இருக்கின்றோம். தேர்தலில் வேட்பாளரொருவர் போட்டியிடும்போது தேர்தல் ஆணைக்குழு அவரிடமிருந்து ஒரு சத்திய கடதாசியை பெற்றுக்கொண்டு தேர்தலில் போட்டியிட அனுமதிக்கலாம். அதன் பின்னர் குறித்த வேட்பாளரது பிரஜாவுரிமை தொடர்பில் நீதிமன்றத்தில் யாராவது கேள்விக்குட்படுத்தினால் அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்படுவதுடன் அதற்கு மேலதிகமாக பொய் சாட்சி சொன்ன குற்றத்திற்காக அவருக்கு தண்டனையையும் விதிக்க முடியும். இவ்வாறான ஏற்பாடு கொண்டுவரப்பட்டால் இரட்டை பிரஜாவுரிமை கொண்ட பலரும் தேர்தலில் போட்டியிட பின்னடிப்பார்கள்.

புதிய திருத்தத்தின்படி இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் தற்போதுள்ள பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தால் அவர்கள் தொடர்ந்து பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பதற்கான தகுதியை இழப்பார்கள் என்றார்.

(ம-7,18,33,104)

## திருடப்போன...

கள் மடக்கிப் பிடிக்க முயன்றபோது தப்பி ஓடியுள்ளார்.

எனினும் ஒருவரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்தபோதும் மற்றையவர் தப்பி ஓடியுள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நேற்று செவ்வாய்க்கிழமை கொள்ளையிடச் சென்ற இருவர், வீட்டில் யாரும் இல்லாத நிலையில், அங்கு சமைத்துச் சாப்பிட்டு மது அருந்திவிட்டு போதையில் தூங்கியுள்ளனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை வீட்டின் உரிமையாளர் வீட்டுக்கு வந்து, திருடர்களை கண்டதும் அயலவர்களை அழைத்துள்ளார்.

இதன்போது அயலவர்கள் வருவதையறிந்து ஒருவர் தப்பிச் சென்ற நிலையில், மற்றையவர் கிராமவாசிகளின் கைகளில் அகப்பட்டு நையப் புடைக்கப்பட்டார்.

மக்களால் பிடிக்கப்பட்ட கொள்ளையன் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ம-7)

## 'சாம்பலில்...

பாட்டில் இன்று வியாழக்கிழமை புத்தளம் ஆரச்சிக்கட்டு பகுதியில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

மக்கள் போராட்டத்தை தொடர்ந்து ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் மாற்றமடைந்ததன் பின்னர் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் முதலாவது கட்சிக் கூட்டம் கடந்த 8ஆம் திகதி 'களுத்துறையில் இருந்து மீண்டும் ஒன்றிணைவோம்' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்றது. (ம-7)

## மின்கட்டணம்...

கப்படுவதாக அதன் ஒருங்கிணைப்பாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மின்கட்டணம் மேலும் அதிகரித்தால் பொதுமக்களுக்கு அது மிகப் பெரிய சுமையாக அமையும். (ம-7)

## ரணிலுடன்...

இலங்கைக்கான அமெரிக்க துணைத் தூதர் டக் சோனெக் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டார்.

யாழ்ப்பாணம் வலி. வடக்கு மயிலிட்டி துறைமுகத்துக்கு சென்ற அவர், துறைமுக அதிகாரிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பொருளாதார நிலைமை தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் தற்போது ஏற்பட்டுள்ள மண்ணெண்ணெய் பிரச்சினை மீனவர்கள் எதிர்கொள்கிற முக்கிய பிரச்சினையாக காணப்படுகின்றமை தொடர்பில் இதன்போது அவர் மீனவர்களிடம் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் மயிலிட்டி கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு சென்ற அவர், அங்கு மீள்குடியேற்ற குழுவினரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது காணிகள் விடுவிக்கப்படாமை தொடர்பிலும் பொதுமக்களுடன் காணிகள் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் இருக்கின்றது தொடர்பிலும் அவருக்கு வலிவடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சுகிர்தன் தெளிவுபடுத்தினார்.

இது தொடர்பில் அவர், தான் ஜனாதிபதியுடன் பேசி ஒரு நல்லதொரு முடிவினை பெற்றுத் தருவதாக கூறியுள்ளார். (ம-7,33)

## சமகால நிலைமை...

மேற்கொண்ட அமெரிக்கத் தூதுவர் கலந்துரையாடினார்.

இலங்கைக்கான அமெரிக்க துணைத் தூதர் டக் சோனெக் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு அரசியல் தரப்புகளை சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளை தனித்தனியாக அமெரிக்க துணை தூதர் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், வடமாகாண சபை அவை தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தரப்புக்கள் தனியாகவும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஸ், வாசுகி சுதாகர் ஆகியோர் தனியாகவும் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது சமகால நிலைமைகள் தொடர்பில் அமெரிக்க துணைத் தூதர் அரசியல் பிரதிநிதிகளிடம் கேட்டறிந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7,18,33,104)

## பாராளுமன்றத்...

என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட அவர், புதிய அரசியலமைப்பு திருத்தத்தின் பிரகாரம் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் பாராளுமன்றத்தில் இருக்க முடியாது எனக் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் இரட்டைக் குடியுரிமை உள்ளவர்களை நீதித்துறையின் மூலம் கண்டுபிடிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

தன நிதானய
திகதி - 2022.10.26
சீட்டிழுப்பு இலக்கம் - 950
M 32 40 42 45

மஹஜன சம்பத
திகதி 2022/10/26
சீட்டிழுப்பு இலக்கம் 4920
D 7 0 0 4 7 0
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.10.26
சீட்டிழுப்பு இலக்கம் 229
கும்பம் 11 22 38 45 கும்பம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 26/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1268
X 07 23 35 38 80

கொவிசெத
திகதி 2022.10.26
சீட்டிழுப்பு இலக்கம் 3162
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
O 02 22 73 79
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 26/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1375
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 3 6 2 1 7 8
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1895
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2022.10.26
தினம் புதன்கிழமை
N 30 34 37 73
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 3,524,080/-

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.10.26
சீட்டிழுப்பு இல : 4056
வர்ணம் : ஊதா
ரூ. 4,495,380/-
வெற்றி இலக்கங்கள்
12 23 35 59 C
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது
ரூ. 5,754,919.80
திகதி 2022-10-26
வெற்றி வாரம் 3607
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 16 22 44 45
மேஷம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 13,807,679.80

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
27
B 29 06 15 68 74
சீட்டிழுப்பு வாரம் 1071
வர்ணம் பச்சை
திகதி 2022.10.26 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 272,377,265.80
தொலை பேசி 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1865
சீட்டிழுப்பு திகதி 2022-10-26
வெற்றி இலக்கங்கள்
27 37 54 63 M
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 36,584,764/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல : 1721
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2022.10.26
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 3,580,300/-
வெற்றி இலக்கங்கள்
06 23 61 62 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9 மாதங்களில்...

முடிவடைந்த 9 மாத காலப்பகுதியில் இந்தக் கொலைகள் பதிவாகியுள்ளன.

கடந்த ஆண்டு முழுவதும் 521 கொலைகள் மட்டுமே பதிவாகியுள்ளன" என்றும் அவர் மேலும் கூறினார். (ம-7)

## பாதுகாப்பதற்கு...

நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் எதிர்காலத்தில் ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகையைப் பெறுவது குறித்து கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளிக்கும்போதே, அமைச்சர் பந்துல குணவர்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை பெறுவதற்கு பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அதை நிறுத்தாமல் பராமரிக்கும் வகையில், பல மனித உரிமைகள் அம்சங்களில் முன்னேற்றம் அடைய தேவ்வயான பணிகளை இலங்கை அரசு செய்து வருகிறதென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## மருந்து தட்டுப்...

எடுக்குமாறு சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிற்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மருந்து தட்டுப்பாடு தொடர்பில் துரித கண்காணிப்புக்களை முன்னெடுப்பதற்காக அமைச்சுக்களின் செயலாளர்களை உள்ளடக்கிய பிரத்தியேக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று புதன்கிழமை (26) இடம்பெற்ற போது, நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாடு தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்த அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில், இந்திய கடன் திட்டத்தின் கீழ் மருந்து தட்டுப்பாட்டுக்கு துரித தீர்வினை எட்டுமாறு சுகாதார அமைச்சருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்தியாவசிய உணவு பொருட்கள் மற்றும் மருந்துகள் உள்ளிட்டவற்றை தடையின்றி மக்களுக்கு விநியோகிப்பதற்காக அரசாங்கம் தொடர்ந்தும் அக்கறையுடன் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

அதற்கமைய விநியோக முகாமைத்துவம் தொடர்பில் தட்டுப்பாடின்றி மருந்துகளை விநியோகிப்பதற்காக பிரதான அமைச்சுக்களின் செயலாளர்களை உள்ளிடக்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலாளர் , பிரதமரின் செயலாளர் ஆகியோர் உள்ளடங்களாக இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. மருந்து கொள்வனவிற்காக கிடைக்கப் பெற்றுள்ள உதவிகளில் பெருமளவானவை கடனுதவிகளாகும். உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பவற்றிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்கள் தொடர்ச்சியாக மீள செலுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு கடன்களை மீள செலுத்துவதால் உதவிகளும் கிடைக்கப் பெறுகின்றன. இவ்வாறு கிடைக்கப் பெற்ற உதவிகளில் சில வீதி புனரமைப்புக்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றார். (ம-7)

# கொழும்பில் விபத்து

## ஒருவர் பலி

கொழும்பு- கொட்டாஞ்சேனை பகுதியில் பஸ் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் ஜோர்ஜ் ஆர். டீ சில்வா மாவத்தை, கிறிஸ்டி பெரேரா சுற்று வட்டத்திற்கருகில் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் உயிரிழந்தவர் 27 வயதுடைய மீதொட்டமுல்ல பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

கொட்டாஞ்சேனை பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13267)

076 825 7716 (ஆகாஸ்)

**வேலைவாய்ப்பு**

வட மாகாணத்தில் இயங்கிவரும் EDM நிறுவனத்தின் கிளைகளுக்கு பல்வேறு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- உதவி முகாமையாளர்,
- மேற்பார்வையாளர்
- நிர்வாக உத்தியோகத்தர்
- விநியோகத்தர்

போன்ற பதவிகளுக்கு ஆட்கள் கோரப்படுகின்றன.

நாள் சம்பளம் - 1,200 தொடக்கம் 2,000

மாத சம்பளம் - 30,000 தொடக்கம் 45,000

சாதாரண தகுதி - O/L, A/L

வயது எல்லை - 17 தொடக்கம் 30 (13264)

076 205 7355, 076 678 3886

**வேலைவாய்ப்பு**

யாழ். நெல்லியடியில் இயங்கிவரும் முன்னணி நிதி நிறுவனம் (finance company) ஒன்றிற்கு வேலை வாய்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. A/L மூன்று பாடத்திலும் சித்தியுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

077 801 6756 (13259)

thanumaran68@gmail.com

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் 12 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

- ஒட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன் (காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்.பஸ் நிலையத்திலிருந்து 1½km தூரம்.
- பார்வையிடும் நேரம் :- காலை 8.00 - மாலை 5.30

1 பரப்பின் விலை - 600,000/= (13268)

தொடர்பு- 077 874 8135, 077 408 2649

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 114 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- மூன்று பரப்பாகவும் நான்கு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- 18 அடி பாதையுடன், நன்னீர் ஊற்று நிலம், நல்ல சூழல்
- 775 வழி பேருந்துகள் செல்லும் காபெட் வீதி
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபெட் விதி அருகாமையில்
- புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 km தூரம் (சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து)
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் மட்டும்.

(தரகர் தேவையில்லை, பார்வையிடும் நேரம் 8.00 am - 5.30 pm) (13268)

தொடர்பு- 076 755 8606, 074 318 7263

**வீடு வாடகைக்கு தேவை**

இருவர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றிற்கு யாழ். நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு

077 635 4224

**வேலைவாய்ப்பு**

இலங்கையின் முன்னணி காப்புறுதி நிறுவனம் ஒன்றிற்கு வடமராட்சி கிளைக்கு Financial Planner, Team Leader தேவைப்படுகின்றது. ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

( முடிவுத் திகதி -05.11.2022 )

077 803 9320 (Whatsapp)

Kirusnakirusna89@gmail.com

075 269 0188 (13258)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை (13252)

தொடர்புகளுக்கு - ஜெயம்

077 986 5457, 077 814 7389

**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4921)




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்.

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

V2 TRAVELS

0777-068-777



அமெரிக்க லொத்தர் இலவச விசா

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

Passport அவசியமில்லை

55'000 விசா இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்

ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இந்த வருடம் எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம் A/L

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்

விபரங்களை V2 Travels and Tours எனும் Facebook பக்கத்தில் பார்வையிடலாம். (C-4921)

V2 Travels 0768226240 0768226244

**வீடு விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு நந்தாவில் அம்மன் கோவிலுக்கு அருகில் 1 பரப்பு 15 குளியில் அமைந்த வடக்கு வாசல் புதிய வீடு உடன் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு (13265)

076 702 3565


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.